செ.வெ.எண்: 29/அக்டோபர் நாள் : 22.10.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**முன்னாள் படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு கல்வி உதவித் தொகை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

**பாரத பிரதமர் கல்வி உதவித்தொகை**

2020-21-ம் கல்வியாண்டில் தொழிற்கல்வியில் சேர்ந்துள்ள முதல் ஆண்டு பயிலும் முன்னாள் படைவீரர்களின் மகன், மகளுக்கு மாண்புமிகு பிரதம மந்திரியின் கல்வி உதவித்தொகை பெறுவதற்கு Online-ல் விண்ணப்பித்திட புதுதில்லி மைய முப்படைவீரர் வாரியத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க வேண்டிய இணையதள முகவரி www.ksb.gov.in ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள்:31.12.2020

**தொகுப்புநிதி கல்வி உதவித்தொகை**

2020-2021-ம் கல்வியாண்டில் தொழிற்கல்வி, தொழில்நுட்ப பட்டயக் கல்வி, தொழிற்பயிற்சி கல்வி மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்வி பயின்று வரும் இளநிலை படை அலுவலர் தரம் வரையிலான முன்னாள் படைவீரர்களது சிறார்களுக்கு, தொகுப்புநிதியிலிருந்து கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2020-2021-ம் ஆண்டில் தொகுப்பு நிதி கல்வி உதவித்தொகையினை பெற edu.exweletutor.com / eduscholarship என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பம் செய்து அதன் நகலினை முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்விண்ணப்பத்தினை ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க இயலும்.

எனவே, தொழிற்கல்வியில் மகன் / மகளை 2020-2021-ம் கல்வியாண்டில் கல்லூரியில் சேர்த்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் அதிக அளவில் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி விண்ணப்பித்து பயன்பெறுமாறும், மேலும் விவரங்களுக்கு இராமநாதபுரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரில் அல்லது 04567-230045 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுமாறும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ.வீரராகராவ் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**